# முக்கியமான தீர்க்கப்பட்ட பிரச்சனைகள்

**(IMPORTANT SOLVED PROBLEMS)**

## 1. தீங்கில்லாக் கேடு

**(DAMNUM SINE INJURIA)**

### பிரச்சனை எண் — 1

**வாதி ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். அப்பள்ளிக்கு எதிரே பிரதிவாதி ஒரு புதிய பள்ளிக்கூடம் ஆரம்பித்தார். வாதியின் பள்ளியிலுள்ள மாணவர்கள் பிரதிவாதியின் பள்ளியில் சேர்ந்தனர். வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. இதனால் வாதி இழப்பீட்டுக்காக வழக்கு தொடுக்கிறார்.**

### தீர்வு:

கொடுக்கப்பட்ட வழக்கில், வாதி இழப்பீட்டுக்கான வழக்கில் வெற்றி பெற முடியாது. தீங்கில்லாக்கேடு இழப்பீடு என்ற சட்ட முதுமொழியின் படி, ஒரு நபரின் சட்டமுறையான உரிமையை மீறாமல் ஏதாவது நஷ்டம் அல்லது சேதம் ஏற்பட்டால், அது வழக்கிடப்படக்கூடிய தீங்கு ஆகாது.

மேற்கண்ட வழக்கில், பிரதிவாதி, வாதியினுடைய பள்ளிக்கூடத்திற்கு எதிரே ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்தது என்பதில் எந்த ஒரு நபரின் சட்ட உரிமையும் மீறப்படவில்லை.

அவரது செயல் வாதிக்கு தீங்கு விளைவிக்ககூடியதாக இருக்கலாம். ஆனால் இது தவறானது அல்ல. ஆகவே பாதிக்கப்பட்ட தரப்பினர் அதாவது வாதிக்கு எந்த செயல் உரிமையையும் உருவாக்காது.(நேரிய மற்றும் நன்னடத்தை ரீதியிலான போட்டி எப்பொழுதும் அனுமதிக்கப்படுகிறது).

நீதிமன்றத்தில் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்யபட முடியாது மற்றும் வாதி இழப்பீடு கோர முடியாது. ஏனெனில் வாதியினுடைய இழப்பு எந்த ஒரு நபரின் சட்ட உரிமையையும் மீறவில்லை.

மேற்கண்ட பிரச்சனை ***கிளாசெஸ்டர் கிராமர் ஸ்கூல்*** வழக்கைப் போன்று உள்ளது. அதில் வாதியின் பள்ளிக்கெதிரே பிரதிவாதி பள்ளிக்கூடம் ஆரம்பித்ததால் வாதிக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு வரி இழப்பீடு பெற முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது.

★★★

### பிரச்சனை எண்—2

**வாதி இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு போர்வை (Carpets) ஏற்றுமதி செய்யும் வணிகர். பிரதிவாதிகள் ஐந்து வணிகர்கள் ஆவர். இவர்கள் ஐந்து பேரும் கூட்டாக வியாபாரம் செய்யும் ஒரு குழு அமைத்தனர். இவர்களுக்கும் வாதிக்கும் உள்ள போட்டி என்னவென்றால் வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமாக குறைந்த விலையில் விற்பனை செய்வதே ஆகும். இதன் விளைவாக, வாதியின் அநேக வாடிக்கையாளர்கள் அவரை விடுத்து பிரதிவாதியிடம் சென்றனர். வாதியின் சில முகவர்களும் வாதியை விடுத்து பிரதிவாதியிடம் சென்றனர். இதன் விளைவாக, இவ்வகையான போட்டியை வாதியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே வியாபாரத்தை வாதி முடக்க வேண்டிய சூழ்நிலையானது. எனவே வாதி, பிரதிவாதி சதி செய்து தனக்கு தீங்கிழைக்கிறார் என்று இழப்பீடு கோருகிறார். வாதி வெற்றி பெறுவாரா என்று காரணங்களுடன் முடிவு செய்க.**

### தீர்வு:

மேற்கண்ட வழக்கு, ***மொகல் ஸ்டீம்ஸிப் கம்பெனி எதிர் M.C. கிரிகர் கோவ் அன்ட் கம்பெனி*** என்ற வழக்கை ஒத்தது. இவ்வழக்கில்

நீதிமன்றம் ஒரு நல்லெண்ணத்தினால் செய்யக்கூடிய போட்டியான வியாபாரம் அதாவது கவர்ச்சிகரமான குறைந்த விலையை வாடிக்கையாளர்களுக்கென்றே நிர்ணயம் செய்து விற்பனை செய்வது, சட்ட முதுமொழியான தீங்கில்லாக் கேடு என்பதில் அடங்கும்.

அவ்வாறே, வாதி பிரதிவாதியின் மீது வழக்கிட முடியாது. பிரதிவாதிகள் ஒரு குழுவாக சேர்ந்து செயல்படுவது தீங்கியல் சதிக்கு வழிவகுக்கும் என்ற வாதியின் வாதம் அவர்களது தீய எண்ணம் மற்றும் சட்ட முரணான நியாயங்காட்டுதல் நிரூபிக்கப்பட்டாலன்றி வெற்றி பெறாது.

நல்லெண்ணத்துடனான போட்டி மற்றும் வியாபார நலனுக்காக அமைக்கப்படும் சங்கம் சதி என்ற வரம்பின் கீழ் வராது. எனவே சதித் தீங்கியலின் கீழ் பிரதிவாதிகளிடமிருந்து இழப்பீடுகள் கோரி வாதியினால் தொடரப்படும் வழக்கு தோல்வியுறும்.

★★★

## பிரச்சனை எண்—3

**அ என்ற முடிதிருத்துபவர் ஒரு முடி திருத்தும் நிலையத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் ஆ என்ற செல்வந்தர் அ வின் வாடிக்கையாளர். இருவருக்கும் ஏதோ காரணங்களுக்காக சச்சரவு ஏற்படுகிறது. ஆ தீய நோக்குடன், சில முடி திருத்துபவர்களை பணியில் அமர்த்தி, அ வின் கடைக்கு எதிராக ஒரு முடிதிருத்தும் நிலையத்தை ஆரம்பித்து, குறைவான தொகையை வசூலிக்கிறார் இதன் விளைவாக அ தனது வாடிக்கையாளர்களை இழந்து நஷ்டம் அடைகிறார். அ, ஆ விடமிருந்து இழப்பீடு பெறமுடியுமா?**

## தீர்வு:

அ, ஆ விடம் இருந்து எந்த இழப்பீடும் பெற இயலாது. ஏனென்றால் இது ‘தீங்கில்லாக் கேடு’ என்ற கோட்பாட்டின் கீழ் வருவதால் இந்த

வழக்கில் வாதி தனது இழப்பீடு கோரும் வழக்கில் வெற்றி பெற இயலாது. தீங்கில்லா கேடு என்ற கோட்பாட்டின் படி சட்டம் மீறப்பட்டால் ஒரு நபருக்கு இன்னொரு நபரால் தீங்கு இழைக்கப்பட்டால், அது நடவடிக்கைகளுக்கு எந்த உரிமையும் அளிக்காது.

இந்த வழக்கில் அ வின் கடைக்கு எதிராக ஆ முடிதிருத்தும் நிலையத்தை ஆரம்பித்தது அவருடைய சட்ட உரிமையை மீறியதாக இல்லை. ஆ வின் செயல் அ க்கு தீங்காக இருந்தாலும் சட்டப்படி தவறானதல்ல.

அ விற்கு ஏற்பட்ட நஷ்டமானது எந்த ஒரு நபருடைய சட்டப்படியான உரிமை மீறப்படாமல் ஏற்பட்டுள்ளதால் அவர் இழப்பீடு கோர முடியாது. நியாயமான உண்மையான போட்டி ஏற்கத்தக்கதே. ஆ மேல் வழக்கு தொடரவோ இழப்பீடு கோரவோ முடியாது, ஏனென்றால் அ வின் நஷ்டம், எந்த நபரினுடைய சட்ட உரிமையையும் மீறப்படாமல் உண்டானதாகும்.

இந்த வழக்கின் பொருண்மை பிரபல ***கிளௌசெஸ்டர் கிராமர் ஸ்கூல்*** வழக்கை ஒத்திருக்கிறது. இந்த வழக்கில், வாதியின் பள்ளிக்கு எதிராக பிரதிவாதி பள்ளி ஆரம்பித்ததினால் வாதிக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு பிரதிவாதி இழப்பீடு தர கடமைப்பட்டவரல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

★★★